## வகுப்பு - 7 - பருவம் - 1 - தாவரவியல்

## 5 - தாவரங்களின் இனப்பெருக்கம் மற்றும் மாற்றுருக்கள்

36. பொருத்துக

a) அல்லி இதழ் - i. ஆண் உறுப்பு

b) புல்லி இதழ் - ii. பிரகாசமான பகுதி

c) மகரந்தத்தாள் வட்டம் - iii. பெண் உறுப்பு

d) சூலக வட்டம் - iv. மொட்டுக்களைப் பாதுகாப்பது

(1) a - ii b - iv c - i d - iii

(2) a - ii b - i c - iii d - iv

(3) a - iii b - iv c - ii d - i

(4) a - i b - ii c - iii d - iv

37. சூலக வட்டத்தின் அடிப்பகுதி ______ காணப்படும்.

(1) சிறுத்து (2) பருத்து (3) நீண்டு (4) புள்ளியாக

38. பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?

(1) சூல்முடி (2) சூல்தண்டு (3) சூல் (4) மகரந்தப்பை

39. முழுமையான மலர் என்பது ______.

(1) சூலக வட்டம் கொண்டது

(2) சூலக வட்டம், மகரந்தத்தாள் வட்டம் கொண்டது

(3) சூலக வட்டம், மகரந்தத்தாள் வட்டம், அல்லி வட்டம் கொண்டது

(4) சூலக வட்டம், மகரந்தத்தாள் வட்டம், அல்லி வட்டம் மற்றும் புல்லி வட்டம் கொண்டது

40. முழுமையான மலர் என்பது ______.

(1) ஆண் மலர் (2) பெண் மலர்

(3) இருபால் மலர் (4) எதுவுமில்லை / அப்படி எதுவுமில்லை

41. பின்வரும் முழுமையற்ற மலர் குறித்த கருத்துக்களில், தவறானது எது?

(1) ஆண் மலர் (2) பெண் மலர்

(3) இருபால் மலர் (4) ஆண் மலர் அல்லது பெண் மலராக இருக்கலாம்

42. ஆண் மலர் என்பது ______.

(1) மகரந்தத்தாள் வட்டமும் கொண்டது

LIVEWORKSHEETS

(2) சூலக வட்டம் மட்டும் கொண்டது

(3) மகரந்தத்தாள் வட்டம் மற்றும் சூலக வட்டம் கொண்டது

(4) மகரந்தத் தாள் வட்டம் கொண்டு சூலக வட்டம் இல்லாமல் இருப்பது

43. பெண் மலர் என்பது _______.

(1) அல்லி, புல்லி, சூலக வட்டம் உடையது

(2) அல்லி, புல்லி, மகரந்தத்தாள் வட்டம் உடையது

(3) அல்லி, புல்லி, சூலகவட்டம், மகரந்தத்தாள் வட்டம் உடையது

(4) அப்படி எதுவும் இல்லை

44. மஞ்சரி கொண்ட மலருக்கு எடுத்துக்காட்டு _______.

(1) செம்பருத்தி (2) சூரியகாந்தி (3) மல்லிகை (4) கத்தரி

45. ட்ரைடாக்ஸ் புரோகும்பன்ஸ் என்பது எந்தத் தாவரத்தின் அறிவியல் பெயர்?

(1) செம்பருத்தி (2) பூசணி (3) வெட்டுக்காயப்பூண்டு (4) தென்னை

46. பின்வருவனவற்றுள் பொருந்தாததைக் குறிப்பிடுக

(1) செம்பருத்தி (2) பூசணி (3) தென்னை (4) பப்பாளி

47. தன் மகரந்தந்தச் சேர்க்கை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(1) இது இருபால் மலர்களில் நடைபெறுகிறது

(2) இதனால் உருவாகும் புதிய தாவரங்களில் எவ்வித வேறுபாடுகளும் இருக்காது

(3) இது நடைபெற அதிக அளவில் மகரந்தத்துகள்கள் உற்பத்தியாகத் தேவையில்லை

(4) இது ஒருபால் மலர்களில் நடைபெறுகிறது

48. அயல் மகரந்தச் சேர்க்கை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(1) அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெற அதிக அளவில் மகரந்தத் தூள்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்

(2) இதனால் உருவாகும் புதிய தாவரங்களில் புதிய பண்புகள் காணப்படுகின்றன

(3) ஆப்பிள், ஃபிளம்ஸ், ஸ்ட்ராபெர்ரி மற்றும் பூசணி வகைகளில் பூச்சுகள் மூலம் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது

(4) பொதுவாக ஃபேபேஸி குடும்பத்தைச் சார்ந்த அவரை மற்றும் சொலானேஸி குடும்பத்தைச் சார்ந்த தக்காளி ஆகியவற்றில் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது

49. பின்வருவனவற்றுள் தவறான இணையைத் தேர்ந்தெடு

LIVEWORKSHEETS

(1) அவரை - தன் மகரந்தச் சேர்க்கை

(2) ஆப்பிள் - அயல் மகரந்தச் சேர்க்கை

(3) தக்காளி - அயல் மகரந்தச் சேர்க்கை

(4) பூசணி - அயல் மகரந்தச் சேர்க்கை

50. பின்வருவனவற்றுள் மகரந்தச் சேர்க்கையாளர் அல்லாதது எது?

(1) பூச்சிகள் (2) காற்று (3) பறவைகள் (4) சூரிய ஒளி

51. ஆண் கேமீட்டும், பெண் கேமீட்டும் இணையும் நிகழ்ச்சி ______.

(1) மொட்டு விடுதல் (2) துண்டாதல் (3) கருவுறுதல் (4) ஸ்போர் உருவாதல்

52. பின்வருவனவற்றுள் தனிக்கனி அல்லாதது எது?

(1) மாம்பழம் (2) சீத்தாப்பழம் (3) பட்டாணி (4) தக்காளி

53. கத்தரிக்காய் மற்றும் வெண்டைக்காயின் அடிப்பகுதியில் உள்ள பசுமை நிறப் பகுதி எது?

(1) அல்லி (2) புல்லி (3) மகரந்தத்தாள் (4) சூலகம்

54. பின்வருவனவற்றுள் திரள் கனி எது?

(1) மாம்பழம் (2) சீத்தாப்பழம் (3) கத்தரி (4) தக்காளி

55. கருவுறுதலுக்குப் பின் நடைபெறும் மாற்றங்களில், தவறானது எது?

(1) சில கனிகளில் புல்லி வட்டம் கனியோடு ஒட்டி நிலைத்திருக்கும்

(2) அல்லிகள் மற்றும் மகரந்தத்தாள் வட்டம் கீழே உதிராது

(3) சூற்பை கனியாக மாறுகிறது

(4) சூற்பையில் உள்ள சூல்கள் விதைகளாக மாறுகின்றன

56. கருவுறுதலுக்குப் பின் உணவைச் சேமித்து வைப்பதற்காக ______ பருத்து கனியாக மாறுகிறது.

(1) அல்லி (2) புல்லி (3) சூலகம் (4) மகரந்தத்தாள்

57. கருவுறுதலுக்குப் பின் மலரிலிருந்து உதிராதது எது?

(1) அல்லி (2) சூற்பை (3) சூலகத்தண்டு (4) மகரந்தத்தாள் வட்டம்

58. உலகின் பெரிய மற்றும் அதிக எடையுள்ள விதை ______.

(1) பலாப்பழம் (2) இரட்டைத் தேங்காய்

(3) இந்தியத் தேங்காய் (4) பாக்கு விதை

LIVEWORKSHEETS

59. உலகின் மிகப்பெரிய விதையான இரட்டைத் தேங்காயின் எடை ______ கிலோ.

(1) 18　　(2) 1　　(3) 8　　(4) 100

60. தாவர உலகின் மிகச்சிறிய விதைகள் ______.

(1) கடுகு　　(2) சீரகம்

(3) தண்டுக்கீரை விதைகள்　　(4) ஆர்க்கிட் விதை

61. 35 மில்லியன் ஆர்க்கிட் விதைகளின் எடை வெறும் ______ கிராம் மட்டுமே.

(1) 10 கிராம்　　(2) 15 கிராம்　　(3) 20 கிராம்　　(4) 25 கிராம்

62. உலகின் மிகப்பெரிய விதையான இரட்டைத் தேங்காயின் நீளம் ______ அங்குலம்

(1) 12　　(2) 18　　(3) 24　　(4) 36

63. உலகின் மிகப்பெரிய விதையான இரட்டைத் தேங்காயின் விட்டம் ______.

(1) 6 அடி　　(2) 3 அடி　　(3) 30 அடி　　(4) 300 அடி

64. பொருத்துக

a) உருளைக் கிழங்கு - i. மொட்டு விடுதல்

b) ஈஸ்ட் - ii. உடல் இனப்பெருக்கம்

c) ஸ்பைரோகைரா - iii. ஸ்போர் உருவாதல்

d) பாசி மற்றும் பெரணிகள் - iv. துண்டாதல்

(1) a - ii　b - iv　c - i　d - iii　　(2) a - ii　b - i　c - iv　d - iii

(3) a - iii　b - iv　c - ii　d - i　　(4) a - I　b- ii　c - iii　d - iv

65. உருளைக்கிழங்கு, கரும்பு, சேனைக்கிழங்கு ஆகியவற்றில் நடைபெறும் இனப்பெருக்கம் ______.

(1) உடல் இனப்பெருக்கம்　　(2) மொட்டு விடுதல்

(3) துண்டாதல்　　(4) ஸ்போர் உருவாதல்

66. பூவாத் தாவரங்களான பாசிகள் பிரையோஃபைட் மற்றும் டெரிடோஃபைட் (பெரணிகள்) போன்றவற்றில் நடைபெறும் பாலின இனப்பெருக்க முறை ______.

(1) உடல் இனப்பெருக்கம்　　(2) மொட்டு விடுதல்

(3) துண்டாதல்　　(4) ஸ்போர் உருவாதல்

67. பொருத்துக

a) ஊன்றுதல் மற்றும் உறிஞ்சுதல் - i. மலர்

LIVEWORKSHEETS

b) ஒளிச்சேர்க்கை - ii. தண்டு

c) கடத்துதல் - iii. இலை

d) இனப்பெருக்கம் - iv. வேர்

(1) a - ii b - iv c - I d - iii (2) a - ii b - i c - iii d - iv

(3) a - iv b - iii c - ii d - i (4) a - i b - ii c - iii d - iv

68. பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?

(1) முள்ளங்கி (2) டர்னிப் (3) பீட்ரூட் (4) ஆலமரம்

69. பொருத்துக

a) முள்ளங்கி - i பம்பர வடிவவேர்

b) பீட்ரூட், டர்னிப் - ii கூம்பு வடிவ வேர்

c) கேரட் - iii தூண் வடிவ வேர்

d) ஆலமரம் - iv கதிர் வடிவ வேர்

(1) a - ii b - iv c - i d - iii (2) a - ii b - i c - iii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - iv b - I c - ii d - iii

70. பொருத்துக

a) தூண் வேர்கள் - i. கரும்பு, மக்காச்சோளம்

b) முட்டு வேர்கள் - ii. ஆலமரம்

c) பற்று வேர்கள் - iii. அவிசீனியா

d) சுவாச வேர்கள் - iv. வெற்றிலை, மிளகு

(1) a - ii b - i c - iv d - iii (2) a - ii b - i c - iii d - iv

(3) a - iii b - iv c - ii d - i (4) a - I b - ii c - iii d - iv

LIVEWORKSHEETS